மணி விழாத் தலைவர்கள்

திருமதி டாக்டர்

# S. தருமாம்பாள் அம்மையார்

பேராசிரியர் புலவர்

## மயிலை. சிவமுத்து

இவர்கள்தம்

# வரலாற்றுச் சுருக்கம்

மாணவர் மன்ற வெளியீடு

நிலைய முகவரி:


17. இரத்தின முதலி தெரு,
கொண்டித்தோப்பு, சென்னை—1.

# முன்னுரை

தென்னாட்டுத் தலைநகராய் விளங்கும் சென்னையில் பல்லாண்டுகளாய் வாழ்ந்து தமிழ் வளர்க்கும் தொண்டில் ஈடுபட்டுள்ள தமிழ்ப் பெருமாட்டியார் டாக்டர். சி. தருமாம்பாள் அவர்கட்கும், முதுபெரும் புலவர். உயர்திரு. மயிலை. சிவமுத்து அவர்கட்கும் அறுபதாண்டு நிறைவு மணிவிழா தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் இனிய தலைமையில் நடைபெறுகிறது. இருவரும் தம் வாழ் நாளெல்லாம் தமிழர் நல்வாழ்வுக்கும் தமிழ்மொழிவளர்ச்சிக்குமே செலவிட்டவர்கள். மாணவர் உலகில் தமிழ் உணர்வைப் பெருக்குவதற்கெனவே ஏற்படுத்தப்பட்ட எம் மாணவர் மன்றத்தில் உயர்திரு. டாக்டர் தருமாம்பாள் அவர்களும், உயர்திரு. புலவர் மயிலை சிவமுத்து அவர்களும் முறையே தலைவராகவும், தேர்வுக்குழுத் தலைவராகவும் பல்லாண்டுகள் தொடர்ச்சியாகவே இருந்து ஆற்றிய பணிகள் அளவில்லாதவை. இவ்விருவர்தம் அறுபதாண்டு வாழ்க்கை வரலாறுகள் அரியபல நிகழ்ச்சிகள் பொதிந்தவை. தற்கால மாணவ மாணவியர்க்குக் கலங்கரை விளக்கம் போல் உதவும் சிறந்த வழிகாட்டியாகும். இஃதொன்றையே நோக்கமாகக் கொண்டு சுருங்கிய அளவில் இருவரின் வாழ்க்கை வரலாறுகளை எம் மாணவர் மன்றத்தின் சார்பில் வெளியிடலானோம்.

**தமிழ் மக்களும் மாணவ மாணவியர்களும் இவ்வெளியீட்டைப் பயன்படுத்திக் கொண்டு நல்லாதரவு அளித்து உதவ வேண்டுகிறோம்.**

**செயலாளர்.**



தமிழ்ப் பெரியார்

**திரு. வி. கலியாண சுந்தரனர்**


**டாக்டர் S. தருமாம்பாள்**

**புலவர் மயிலை. சிவமுத்து**

ஆகிய இவர்தம் அறுபதாம் ஆண்டு மணிவிழாவுக்குத் தலைமை வகித்தவர்



டாக்டர் S. தருமாம்பாள் அம்மையார்



புலவர் மயிலை. சிவமுத்து

## சென்னை மாணவர் மன்றத் தலைவர்
# டாக்டர் S. தருமாம்மாள் அம்மையாரின் வாழ்க்கைக் குறிப்பு

### தோற்றுவாய்

தமிழகத்தில் 1938 ஆம் யாண்டு பெரும் புயல் வீசிற்று. தமிழர் விழித்தனர். தமிழ் நாட்டில் தாய் மொழிக் கல்வி யில்லை. எல்லோரும் கற்றாரில்லை. இந் நிலையில் தமிழர்க்கு ஏற்காத இந்தி யெனும் அயல் மொழி இளைஞர்க்குக் கட்டாயக் கல்வி எனச்சட்டம் வந்தது.

அப்பொழுது ஓர் அம்மையின் குரல் எழுந்தது. அவர்கள் நா "தமிழ் வாழ்க" என்றது. அவர்கள் மூச்சு "தமிழ் நாடு தமிழர்க்கே" என்றது. அவர்கள் பேச்சு "அல்லற் கஞ்சோம்; ஒரு சிறை செல்லற் கஞ்சோம்; இல்லுக்கோர் தமிழ் மறவர், வீட்டுக்கோர் நாட்டுப் பெண்; தொல்லை தரும் இந்தியினை வெல் லோமோ? மொழியே நம் விழி. விழியை இழந்து இருப்பதிலும் இறப்பதே நன்று. மானம் இழந்த பின் வாழாமை முன்னினிது" என்றது. காளையரும் கன்னியரும் களம் நோக்கினர். அவர்கள் விழி "சிறைச் சாலை என்ன செய்யும்" என்றது. அவர்கள் நடை "மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை நம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை" என்றது. அந்த அம்மை

தான் இன்று நாம் பாராட்டும் திரு. தருமாம்பாள் அவர்கள்.

### அம்மையாரின் பிறப்பு வளர்ப்பு

தென்னாட்டின் பழத் தோட்டம் எனத் திகழும் இராசராசன் தலை நகராகிய தஞ்சாவூரை யடுத்த கருந் தட்டாங்குடி என்னும் சிற்றூரே நம் அம்மையார் தரு மாம்பாளின் பிறப்பிடமாகும். அவர் அங்கே 1890 ஆம் யாண்டு புரட்டாசித் திங்கள் சரசுவதி பூசை யன்று பிறந்தார். தந்தை சுவாமிநாதர்; கீர்த்தி வாய்ந்த துணிக்கடைச் சொந்தக்காரர். தாயார் நாச்சி யார் என்னும் பாப்பம்மாள். நாடு போற்றும் நல்ல குழந்தை சரசுவதி பூசையன்று பிறந்ததால் பெற் றோர் சரசுவதி என்றே பெயர் சூட்டினர். ஆனால் வருங்காலப் பெயர் நோக்கித் "தருமாம்பாள்" என்றே யாவரும் அழைத்தனர். அம்மையாரின் பாட்டனார் ஒரு திவான் பேஷ்கார்; தந்தையார் கரந்தைத் தமிழ்ச்சங்கப்புரவலர், வழக்கறிஞர் உமா மகேசுவர ரின் உற்றநண்பர்.

அம்மையார் இளமையிலேயே எதையும் உற்று நோக்கி ஆழ்ந்து சிந்திக்கும் அருங்குண முடையவ ரானார். காலம் என்னும் பொல்லா இயற்கை அம்மை யாரின் பெற்றோரை இளமையிலேயே கொண்டு சென் றது. அதனால் இலக்குமி என்ற வளர்ப்புத் தாயே அம்மையாரைப் பாராட்டி வளர்த்தனர். அம்மையா ரின் தாய்க்கு இவர்கள் ஒரே பெண்தான். தாயுடன் பிறந்தவர்கள் பதினொரு சகோதரிகள். அம்மை யாரின் அன்புடைய மாமன் இராமசாமி என்பவ ராவர்.

## இளமை நிகழ்ச்சிகள்

குழந்தை தருமாம்பாள் ஒரு நாள் துயிலும் பொழுது நல்ல பாம்பு என்னும் நாகப் பாம்பு வயிற்றைச் சுற்றிய வண்ணம் தன் தலையை அம்மையின் கன்னத்தில் முத்த மிடுவதுபோல் பதிய வைத்துக் கொண்டிருந்ததாம். அப்பக்கம் வந்த அம்மையின் பாட்டியார் பொன்னம்மாளின் காலடி அரவங் கேட்கப் பாம்பு நழுவியது. குழந்தைக்குத்தீங்கு ஒன்றுமில்லை என்றறிந்த பாட்டியார் தம் பெயர்த்திக்கு நாகரத்தினம் என்று பெயர் இட்டனர். அம்மையாரின் இந்த இளமை நிகழ்ச்சி நமக்கு ஒரு வியப்பூட்டும் செய்தி யாகும்.

தருமாம்பாளின் தந்தையார் தம் ஊரிலுள்ள உணவு விடுதிச் சொந்தக்காரருக்கு ஐந்நூறு ரூபாய் கடன் கொடுத்திருந்தார். கடைக்காரர் கடன் வாங்கியிருந்தது அம்மையாருக்குத் தெரியாது. உணவுக் கடைக்காரர் தம் தந்தையாரின் நண்பராதலால் அம்மையார் அங்கு அடிக்கடி சென்று நெய்யில் செய்த தேங்குழல் வாங்கிச் சாப்பிடுவார்களாம். தந்தையார் தாம் கொடுத்திருந்த ரூபாயை வாங்கி வரச் சென்ற போது கடைக்காரர் "இதுவரையிலும் உங்கள் மகள் சரசுவதி நூற்று இருபது ரூபாய்க்குத் தேங்குழல் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறது" என்று மொழிய அதன் படி கணக்குத் தீர்த்து மிகுதியைப் பெற்றனராம்.

உணவு விடுதி ஐயருக்குக் காமாட்சி என்ற ஒரு பெண் இருந்தார். காமாட்சியும் தருமாம்பாளும் கண்ணும் ஒளியும் போன்றவர்கள். ஒரு நாள் காமாட்சி தண்ணீர் இழுக்கும்பொழுது தவறிக் கிணற்றில்

விழுந்து விட்டார். உடனிருந்த அம்மையார் அன்பின் பெருக்கால் தம் தோழியைத் தேடிக் கிணற்றில் குதித்தார்களாம். அதுபோது அம்மையாரின் மண்டையில் அடி பட்டது. அந்த அடையாளத்தை இன்றும் காணலாம்.

## உற்ருர் உறவினர்

அம்மை தருமாம்பாளுக்குச் சகோதர சகோதரிகள் பலருண்டு; ஆனுல் உடன் பிறந்தவர்கள் அல்லர். மகனும் மகளும் உண்டு பலர்; எனினும் வயிற்றில் பிறந்தவர்கள் அல்லர். அது ஒரு குறையா? இவர்கள் குடும்பம் மருமக்களுடன் பல பெயரன் பெயர்த்திகளுடன் மிளிர்கின்றது. அறிவுத் துறையில், கலைத்துறையில் பல பிள்ளைகள் உண்டு அம்மைக்கு; மருத்துவத் துறையிலும் உண்டு. கல்வித் துறையிலே பாப்பா வகுப்பு முதல் கல்லூரி இறுதி வகுப்பு வரை எண்ணற்ற பெயரன் பெயர்த்திகள் உளர். "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற பூங்குன்றனர் பொன் மொழியைத் தம் மொழியாக்கிக் கொண்டார்கள் அம்மை தருமாம்பாள் என்பது பொருந்திய உரையாகும். அம்மையார் தமக்கு உடன் பிறந்தார் போன்று ஒரு சகோதரரையும் ஒரு சகோதரியையும் உடைத்தா யிருக்கின்ருர்கள், அவர்கள் தமிழ்த் தந்தை முது பெரும் புலவர் மயிலை சிவ முத்தும் அவர் தம் தமக்கையார் மலர்முகத்தம்மையாரு மாவர். தவிர, காஞ்சியில் மருத்துவத் துறையில் சிறந்து விளங்கும் டாக்டர். ப. சிற்சபை அவர்களும். சென்னை நகராண்மைக் கழகத்தில் அலுவல் செய்யும் G. M. சமரசம் அவர்களும், அம்மையாருக்கு உதவியாக மருத்துவத் துறையில் தொண்டு செய்யும் திரு. அம்பலவாணன் அவர்களும் அம்மையாரால் போற்றி வளர்க்கப்பட்டு உயர்நிலையுற்ற அருமை மக்களாவர்.

## கல்விப் பயிற்சி

இளமையில் தருமாம்பாள் தமிழ் கற்ருர். சீவ காருணியம் சுப்பிரமணியனுரும் ஆசிரியர் மணி திரு நாவுக்கரசரும் அம்மையாரின் ஆசிரியராவர். பண் டிதை நாராயணி யம்மையாரிடமும் மற்றும் பலரிட மும் அம்மையார் தமிழ் தெலுங்கு மொழிகளில் எழுத வும் படிக்கவும் கற்ருர். தமிழில் தனிப் புலமை யுடை யார்; ஆங்கிலம் மலையாளம் ஆகிய மொழிகளில் ஓங் ளவு பேச்சுப் பயிற்சியும் உண்டு. பள்ளியில் படிக்குங் காலத்தில் வகுப்பில் முதல் மாணவி நம் தருமாம்பாள். ஆண்டு தோறும் முதற் பரிசு நம் அம்மைக்கே. அப் பொழுது அவர்கள் எத்தகைய இன்பத்தை அடைந் திருப்பார்கள்.

எப்பொழுதும் படித்துக்கொண்டே யிருக்க வேண் டும் என்பது அப்பொழுது மட்டு மல்ல இப்பொழுதும் அவர்கட்கு அமைந்த ஆசை. அதனுல் செய்தித் தாள் களையும் பொது நூல்களையும் படித்து உரையாடலும் கருத்துரை வழங்கலும் அம்மையாரின் பொழுது போக்காகும். பள்ளியில் அன்று அவர்கள் படித்தது எட்டாம் வகுப்பு வரையிலும் என்ருலும், இன்று கல் லூரி மாணவரும், ஆசிரியரும், பொது நலச் சேவை செய்யும் அறிஞர்களும் கேட்டறியும் அறிவுரைகள் பல அவரிடம் உண்டு.

## வாழ்க்கை

அம்மையார் அவர்களின் வாழ்க்கை ஆண் பெண் அனைவருக்கும் ஓர் எடுத்துக் காட்டு. மருத்துவம் புரிந்து மிகக் குறைந்த வருவாயைக் கொண்டே அம் மையார் பெருமிதமாக வாழ்கிருர்கள். மருத்துவச்

சாலைக்கு வரும் பிணியாளர்களைக் கண்டு இனிது பேசி நன் மருந்து அளித்து அவர்தம் நோய்களைத் தீர்ப்பதே அம்மையார் தொழில். எனினும் அம்மையார் உடல் நோய் மட்டும் தீர்க்கும் சாதாரண மருத்துவர் அல்லர். பிணியாளர் மனங் கலங்கிக் கூறும் அவர்கள் குடும்பக் குறைபாடுகளையும் துன்பங்களையும் கேட்டு ஒல்லும் வகையால் அவற்றை நீக்குவதற்கும் உதவி புரியும் உள நூல் மருத்துவருமாவர். மருத்துவ நேரத்தில் அம்மையார் வேறு எச் செயலையும் கவனிப்பதில்லை. பிணியாளரைக் காத்திருக்கச் செய்வதென்பது மிக அருவருக்கத்தக்க செயல் என்பது அம்மையார் கொள்கை.

அம்மையாரிடம் படாடோபம் இல்லை; பொதுப் பணத்தில் சிக்கனம் காண்பர்; சொந்தப் பணத்தில் தாராளங் கொள்வர். குழந்தை மருத்துவத்தில் புகழ் (கைராசி) பெற்றவர். நாட்டுப் பணியே அவர்கள் வாழ்க்கை.

## தமக்கென வாழாத் தனிப் பெருஞ்செல்வி

அம்மையாரின் வளர்ப்புப் பிள்ளைகளில் "அருட்சோதி" என்பவரும் ஒருவர். பதினெட்டு ஆண்டுகட்கு முன் அருட்சோதி நோய் வாய்ப்பட்டு பொது மருத்துவச் சாலையில் சிகிச்சை பெற்று வந்தார். நோய் மிகுதியால் மகன் இறக்குந் தறுவாயில் இருப்பதைக் கண்ட அம்மையார் அடைந்த இன்னலுக்கு அளவில்லை. மருத்துவத் தலைவர் அப்பொழுதுதான் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட முறைப்படி "பிறர் இரத்தத்தைச் செலுத்தினால் மகன் பிழைக்கக் கூடும்" என்றார். நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல் என்ற

முறையை நன்குணர்ந்த தாய் ஓர் இளைஞன் உயிர் பிழைத்தால் நாட்டுக்கு நலன் என்று எண்ணித் தாமே இரத்தம் தருவதாகக் கூறினார்கள். மருத்து வரும் பதினறு அவுன்ஸ் (ஏறத்தாழ இரண்டாழாக்கு) இரத்தத்தை அம்மையாரின் உடம்பிலிருந்து எடுத்து விட்டார். அம்மையார் பிழைப்பார்களா என்ற கவலையே எல்லோருக்கும் ஏற்பட்டது. பிறர் நலத்திற் குத் தம் வாழ்க்கையையே ஒப்படைத்த அந்த அம்மையை—தமக்கென வாழா அந்தத் தனிப் பெருஞ் செல்வியை இன்று நாம் பாராட்டுகின்றோம்.

### அம்மையார் ஆற்றிய பணிகள்

**தமிழ் மாதர் கழகம்:**

தமிழ் மாதர் கழகத் தலைவர் திரு. பண்டிதை நாராயணி அம்மையார்; செயலாளர் திரு. தருமாம் பாள் அம்மையார். சேவையைப் பற்றிச் சொல்லுதல் வேண்டுமோ? பெண் கல்வி - பெண் கல்வி என்று வாயளவில் பேசப்பட்டு வந்த அந்த நாட்களிலே அந்தப் பேச்சுக்கு உயிர் கொடுத்தவர் நம் அம்மை யார். வீடுதோறும் கலையின் விளக்கம் உண்டாக அவர் கள் வீடு வீடாகச் சென்று பல பெண்களைக் கண்டார் கள். அவர்களைப் படிக்கவைக்குமாறு அவர்கள் பெற் றோர்களை மன்றாடி வேண்டினார்கள். அப் பெண் களுக்கும் நல்லுரை கூறி அவர்கள் கல்வி கற்க ஊக்க மளித்தார்கள். கிழமை தோறும் அவர்களை ஒருங்கு சேர்த்துத் தமிழ் வகுப்புக்கள் நடத்தினார்கள். இவ்வாறு இவருடனிருந்து உழைத்தவர்களில் திரு. மலர்முகத் தம்மையாரும் ஒருவராவர். இச் செயல் இக்காலத்தில் எளிதாகத் தோன்றினும் அக்காலத் தில் இஃதோர் அருஞ்செயலேயாகும்.

**பெண்கள் மகாநாடு கூட்டிய பெருமை:**

தமிழ் நாட்டிலே 1938 ஆம் யாண்டு கட்டாய இந்திக் கல்வி புகுத்தப் பெற்றபோது இதனை எதிர்த்து ஒரு பெரிய போராட்டம் நிகழ்ந்தது. பெரும்பாலான மகளிரும் இப்போராட்டத்தில் பங்கு கொண்டனர். ஒன்றிய கருத்துக் கொண்ட மகளிரை ஒன்று சேர்த்து அம்மையார் பெண்கள் மாநாடு ஒன்று கூட்டினர். இளம் பெண்களெல்லாம் அச்ச மின்றி முன் வந்து தொண்டாற்ற வேண்டுமென்பது அம்மையார் விருப்பம். சென்னையில் ஒற்றைவாடை நாடக அரங்கில் 13-11-1938 அன்று திரு. மறைமலை அடிகளாரின் மகள் திரு. நீலாம்பிகை அம்மையார் தலைமையில் இளம் செல்வியாகிய திரு. வ. ப. தாமரைக் கண்ணியம்மையாரை வரவேற்புத் தலைவியாகவும் திரு மீனும்பாள் சிவராஜ் அம்மையாரைத் தமிழ்க் கொடி ஏற்றுபவராகவும் கொண்டு பெண்கள் மாநாடு மிக்க சிறப்போடு நிகழ்ந்தது. இம் மாநாட்டினல் கருத்து வேறுபாட்டால் பிரிந்திருந்த தமிழர்கள் பலர் ஒன்று சேர்ந்தனர். இப்பெருமை அம்மையாருக்கே உரித் தாகும்.

**பெண்கள் மறியல்:**

இந்த மறியல் உலகத்திலேயே கேட்டறியாத ஒன்று. பெண்கள் தங்கள் உரிமைக்காக - மதத்திற் காக - மற்றவைகளுக்காகப் போராட்டம் நடத்தி யிருக் கிறார்கள். இல்லை யென்று சொல்லவில்லை. ஆனல் மொழியின் காரணமாகத் தாய் மொழிக்காகப் பெண் கள் முதன்முதல் போராட்டம் நடத்தி மறியல் செய்தது 1938 ஆம் யாண்டில் அம்மையார் தருமாம்பாள் நிகழ்த்திய மறியலேயாகும்.

பெண்ணுரிமை :

"ஆணுக்குப் பெண் அடிமையன்று; கல்விக்கு உரியவள் கலைமகள் என்று சொல்லளவில் கூறி ஆடவர் பெண்ணினத்தைப் பேதைமையில் வீழ்த்தியது போதும். பெண்ணுரிமைக்காகப் பெண் கல்விக்காக ஆண்கள் பரிந்து பேசுவதெல்லாம் ஆட்டுக்கு ஓநாய் அன்பு காட்டுவது போன்றதேயாகும். பெண்களே தங்கள் உரிமைகளுக்காகப் போராட வேண்டும்" என்று கூறியதோடு அம்மை தருமாம்பாளே முன்னின்று உழைத்திருப்பது அரியதோர் செயலாகும். கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழகத்தில் சீர் கெட்ட பெண்களின் வாழ்க்கையைச் செம்மைப் படுத்த அவர்கள் ஆற்றிவரும் பணிகளுக்குத் தமிழகம் நன்றி செலுத்த வேண்டுமானல் பெண்ணுலகம் பேதைமை நீங்கி நிற்க வேண்டும்.

சீர்திருத்தம் :

சமுதாயச் சீர்திருத்தம் அம்மையின் அரும் பணிகளில் ஒன்ருகும். வாழ்க்கையில் இருந்து வரும் பழக்க வழக்கம், மூடபக்தி, குருட்டு நம்பிக்கை இவற்றிற்கு அடிப்படையாக அமைந்துள்ள குப்பைகள் யாவற்றையுங் கொளுத்தி வள்ளுவர் வகுத்த, புத்தர் புகுத்திய நெறியைப் போதித்து, இவற்றிற்கு ஏற்படும் தடைகளுக்கும் எதிர்ப்புக்களுக்கும் சமாதானமும் சமாளிப்பும் அளித்துச் செய்ய வேண்டியவைகளைச் செம்மை பெறச் செய்து வருகின்ருர்கள். இவ்வேலையில் ஈடுபடுபவர்களுக்குக் கலங்கா உள்ளமும் தெளிவும் இருக்க வேண்டுமல்லவா? அவை அம்மைக்கே அமைந்த சிறப்புக்களாகும்.

"எந்தச் செயலும் பெண்களினாலே தான் எளிதாக அமையும். தீண்டாமை முதலிய நோயைப் போக்க எரிமலையில் தோன்றும் நெருப்புக் குழம்பு போன்று பெண்கள் கிளம்ப வேண்டும். சாத்திரம், சடங்கு, சம்பிரதாயம் என்று கூறிப் புத்தியையும் பொருளையும் பாழாக்கிக் கொள்ளாமல் அவர்கள் சிக்கன முறையில் நல் வாழ்வு நடாத்த வேண்டும். எல்லா வளமும், நலமும் பெருகிய நம் நாட்டில் பெண்கள் தாழ்நிலையிலிருப்பது நாணத் தகுந்ததாகும். பெண்கள் அறிவு பெற்றால் சமுதாயம் சீர்திருந்தும்" என்று கல்லுங் கரையும் வகையில் சொற் பெருக்காற்றும் அருஞ் செயல் அம்மையாரின் தனிப் பெருஞ் சிறப்பே யாகும்.

## பொது நலத் தொண்டு

தமிழ் நாட்டிலே வலுக்கட்டாயமாகப் புகுத்தப் பெற்ற இந்திக் கல்வியை எதிர்த்து அம்மையார் 1938 ஆம் யாண்டு சிறை சென்றார்கள். இவர்களைத் தொடர்ந்து இவர்கள் குடும்பத்து மருமக்கள் இருவரும், இவர்கள்பால் மிகவும் நெருங்கிய தொடர்பும், உற்ற அன்பும், சகோதர வாஞ்சையும் உடைய திரு. மலர் முகத்தம்மையாரும், குழந்தை முதல் பாட்டன் பாட்டி வயது வந்தவர்களும், மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார், பட்டம்மாள், வயது சென்ற மூதாட்டி ராஜம்மையார் ஆகியோர்களும் தமிழ் நலங் கருதிச் சிறை சென்றனர். இக்காலமே தமிழின் மறு மலர்ச்சிக் காலம். தமிழ் மொழிக்கு ஊறு விளைப்போர் எவராயினும் நம் அம்மையார் அவரை மதிப்பதில்லை; அஞ்சா நெஞ்சுடன் மேடை மீதேறி அவர்தம் செயலைக் கண்டித்துப் பேசுவார்.

"பட்டங்கள் கொள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் - இனி
எட்டும் அறிவினில் ஆண்களுக்குப் பெண்
இளைப்பில்லை காண்"

என்று அன்று பாரதியார் கூறிய வீர உரைக்கு நம் அம்மையார் அவர்களே சிறந்த எடுத்துக் காட்டாவார்கள்.

ஆதரவற்ற பலருக்கு அம்மை தருமாம்பாள் துணையானார். தம்மிடம் வந்த மாணவர்களைப் பெரிய செல்வர்களிடம் அழைத்துச் சென்று சம்பளத்தை அவர்களே செலுத்துமாறு ஏற்பாடு செய்துள்ளார். பெண்களுக்கு உணவும் உடையும் உதவும்படி செய்திருக்கிறார். புத்தகங்கள் வாங்கிப் படிக்கக் கொடுத்திருக்கிறார். மாணவர்களைப் பள்ளி உணவு விடுதிகளில் பாதிச் செலவில் சேர்ப்பித்துள்ளார். இலவச உணவு விடுதிகளை ஏற்படுத்துமாறு செல்வர்களை வேண்டியிருக்கிறார்கள். இத்தகைய பல பணிகளைப் பிறர் காணா வகையில் செய்திருப்பதே அவர்கள் பெருமையை எடுத்துக் காட்டுவதாகும்.

அம்மையார் அவர்கள் அரசியலாருடன் சண்டையிட்டு உரிமையைப் பெற எக்காலத்திலும் தயங்கியதில்லை.

தமிழாசிரியர்கள் தமிழ் நாட்டில் வயிற்றுக்குப் போதிய ஊதியமின்றி வாடுகின்றார்கள். பிறமொழிக்கு இருக்கும் பெருமை கூடத் தமிழுக்குத் தமிழகத்தில் இல்லை; தமிழ் கற்றோர்க்கு இல்லை. இக் குறையைத் தவிர்க்கத் தமிழாசிரியர் கழகத் தலைவர் புலவர் மயிலை சிவ முத்து அவர்கள் மாகாண முழுதும் உள்ள தமிழாசிரியர்களைத் "துக்க நாள்" கொண்டாட வேண்டினர்.

அவ்வாறே "துக்கவாரம்" நாடெங்கும் கொண்டாடப் பட்டது. அவ்வேளையில் அம்மையார் தருமாம்பாள் "தமிழாசிரியர்கள் 'துக்க வாரம்' கொண்டாடியும் பலன் கிட்டவில்லை யாதலால் பெண்கள் நாங்கள் எல் லோரும் சேர்ந்து 'இழவு வாரம்' கொண்டாடி மறியல் செய்து தமிழாசிரியர்களின் தன்மானத்தைக் காப் பாற்றுகின்றோம்," என்று கூறிய வீர மொழி இருந்த இளைஞர்களுக்கும் புலவர்களுக்கும் மயிர்க் கூச்செறியச் செய்தது. என்னே அம்மையின் பொதுநலச் சேவை யுணர்ச்சி!

அம்மையார் உண்மைக்காக வாதாடிக் காரியத் தைச் சாதிப்பது போல வேறு எவராலும் செய்ய இயலாதென்றே சொல்லலாம். கலை விழா, மாநாடு, பள்ளிக் கட்டிடம், மாணவர் உணவு விடுதி ஆகியவற் றிற்கும் மற்றும் பொது நலன்களுக்கும் பொருள் வேண்டுமென்றால் முதலில் அம்மையையே வேண்டு வார்கள். தமிழுக்கு நல்ல காரியம், தமிழர்க்கு உதவி, தமிழர் வாழ்வுக்கு ஏற்றம் என்று கண்டால் எவர் வந்து கேட்டாலும் தடை சொல்லாது பல பெரியவர் களையும், செல்வர்களையும் அண்டி ஆதரவு பெற்று உதவுவார்கள். அம்மையார் தம் வாழ்வுக்காக இன் றளவும் எவரிடமும் உதவி நாடிச் சென்றவரில்லை. அவர்கள் வாழ்வு ஒரு பொது வாழ்வும் புது வாழ்வும் ஆகும்.

அன்றாடம் மன்றத்திற்காகவும், நாட்டுக்காகவும் மொழிக்காகவும், மாதர் முன்னேற்றத்திற்காகவும் நாம் என்ன செய்தோம்; இனி என்ன செய்யவேண்டும் என்று எண்ணாமல் அம்மையார் துயில் கொள்வ தில்லை.

## அம்மையாரின் செல்வப் பிள்ளை

அம்மையார் வளர்த்த பிள்ளைகளில் செல்வப் பிள்ளை மாணவர் மன்றமே யாகும். பாப்பாக்களும் சிறுவர்களும், சிறுமியர்களும், தமிழ் ஆர்வம் கொண்டு தமிழைக் கற்பதும், கதை எழுதுவதும், கட்டுரை வரைவதும், கையெழுத்துப் போட்டி யிடுவதும், கவிதை இயற்றுவதும், தமிழிசைப் போட்டி யிடுவதும், வள்ளுவர் வள்ளலார் பரிசுப் போட்டிகளில் கலந்து கொள்வதும் அம்மையை ஒரு இன்பக் கடலில் மிதக்க விட்டிருக்கின்றன என்றே இயம்பலாம்.

சென்ற ஆண்டு அம்மையார் உடல் நலங் குன்றிப் படுக்கையில் இருந்ததைக் கேள்விப் பட்டுக் காணச் சென்றிருந்தோம். புலவர் - மயிலைச் சகோதரரைக் கண்டதும் அம்மையார் ஓவென்று அழுதார்கள். ஏன் இந்நிலை என்பது புரியவில்லை. ஆற்று மொழிகளினல் தேற்றிய பின் "கண்ணீர் விடும்படியான கவலை என்ன அம்மா?" என்று கேட்டபொழுது "நான் உயிரோடிருக்கும் பொழுதே மாணவர் மன்றத்திற்கு ஒரு கட்டடம் ஏற்படுத்த வேண்டும் என்றிருந்தேன். அது நிறைவேருமல் போய் விடுமோ என்றே வருந்துகின்றேன்" என்று அம்மையார் கூறினர்கள். உடனே அருகிலிருந்த புலவர் வில்வபதியார் உரத்த குரலில் "அதெல்லாம் ஒன்றும் குறையில்லை யம்மா. குணமாகி நலம் பெறுவீர்" என்று மொழிந்தார். இந்த நிகழ்ச்சியால் அம்மையாரின் உள்ளம், பொது நலத் தொண்டு, தமிழ்த்தொண்டு, தன்னலங் கருதாத் தகைமை யாவும் நமக்கு விளங்குகின்றன.

அம்மை தருமாம்பாள் அவர்களின் தொடர்பும் தலைமையும் கிடைத்தமை மாணவர் மன்றத்தின் பெறலரும் பேறு எனக் கருதிப் பெருமிதம் கொள்கின்றோம். மன்றத்தின் சீரிய நோக்கங்கள் அம்மையாருக்கு மிகவும் பிடித்தமானவை. அவற்றைத் தம் வாழ்வின் இலட்சியங்களாகக் கொண்டு தொண்டாற்றி வருகின்றார்கள். மன்றப் பணி எதுவாயினும் இரவென்றும் பாரார்; குளிரென்றுங் கருதார்; வெயிலென்றும் நோக்கார். உழைத்து உழைத்து மன்றத்தின் உயர்வு காண்பதில் அம்மையார்க்குத் தனி மகிழ்ச்சி யுண்டு. இன்று மன்றம் குமரி முதல் வேங்கடம் வரையில் மாணவருலகில் தமிழ் மணம் பரப்பிப் புகழ் பெற்று விளங்க அம்மையார் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து தலைமை வகிப்பதும் ஒரு காரணம் என்பது மிகையாகாது. அம்மை தருமாம்பாள் மன்றத்தின் ஆயுள் தலைவராக இருந்து பணியாற்ற வேண்டுமென்பதே மன்ற உறுப்பினர் எல்லாருடைய விருப்பமுமாகும்.

இசையிலும் பேச்சிலும் வல்ல கலைச்செல்வியாராகிய நம் அம்மையார் மன்றச் சார்பில் நிகழும் பல்வேறு போட்டிகளிலும் குழந்தைவகுப்பு முதல் கல்லூரிவகுப்பு வரையிலும் எல்லாமாணவரும் பங்குகொள்வதைக் கவனிக்கத்தம் முதுமையையும் பாராட்டாது தாமே நேரில் வந்துநடுநிலை யாளராகவும் இருந்து தொண்டாற்றுவர். சின்னஞ் சிறு குழந்தைகள் ஆர்வமுடன் பாடுவதும் நடிப்பதும் காணக் காண அவர்தம் உள்ளம் களிப்பினால் துள்ளும். குழந்தைகளிடம் அம்மையாருக்குள்ள அன்பினை அளவிடல் அரிது.

மன்றத்தின் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆண்டு தோறும் ஒழுங்காக நடைபெற ஒரு பெருந்தொகை

தேவைப்படுகின்றது. மாணவர்கள் தரும் கட்டணம் பல துறையில் வெற்றி பெறும் ஆயிரக் கணக்கான மாணவர்க்குப் பொற் பதக்கம், வெள்ளிப் பதக்கம், அரிய தமிழ் நூல்கள், நன்மதிப் பிதழ்கள் முதலியன அளிக்கவும் பிறசெலவினங்களை ஏற்றுக் கொள்ளவும் போதுவதில்லை. மன்றத்திற்கென நிலையான நிதியும் இல்லை. அம்மையார் தமக்குத் தெரிந்த அருள் உள்ள மும் தமிழ்ப் பற்றும் மிக்க செல்வர்களிடமும் செல்வி யர்களிடமும் வீடுவீடாய்ச் சென்று நன்கொடை பெற்று மன்றத்துக்கு உறுதுணை புரிகின்றனர். தம் வாழ்நாளில் மன்றத்துக்குச் சொந்தமாக ஒரு தனிக் கட்டடம் கண்டு அதன் மூலமாக மேலும் தமிழ்ப் பணியை விரிவடையச் செய்ய வேண்டும் என்னும் தமது ஆசையை நிறைவேற்றுவதற்கான திட்டங்கள் பலவும் அவர் எண்ணி வருகின்றார்.

அம்மையாரின் உடல் இன்று முதுமையால் தளர் வுற்றிருப்பினும் உள்ளம் தளராமல் உறுதி பெற்றுள் ளது. தமிழ்ப் பண்பாடு மிக்க கலைஞர்கள் சிலரின் ஆதரவாலும் செல்வர்களின் ஒத்துழைப்பாலும் இன் னும் சில ஆண்டுகளில் மன்றத்தின் நிலையம் ஒன்றை அமைக்க அம்மையார் திட்டமிட்டுள்ளார்கள். உள்ள உறுதியும் உலையா உழைப்பும் படைத்த இவர்தம் தலைமையில் மன்றம் ஒரு தனிக் கட்டடத்தைப் பெறுவ தற்குத் தம்மாலான உதவிகளைப் புரிவது தமிழ் மக்கள் அனைவரின் கடமையுமாகும்.

## வாழ்த்து

அம்மையார் மாணவர் மன்றத்தின் இதயம்; தமிழ் நாட்டுப் பெண்ணுலகின் தலைவி; மொழிக்கும் கலைக்கும்

முன்னின்று உதவும் முதல்வி. அவர்தம் வாழ்வால் தமிழ் வளரும்; கலை மிளிரும்; தமிழர் வாழ்வர். எனவே அம்மையார் உடல் நலமும் உள்ள அமைதியும் பெற்றுப் பைந்தமிழ் மொழி போல் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என இம் மணிவிழாத் திருநாளில் மன மகிழ்ச்சியோடு வாழ்த்துகின்ருேம்.

தமிழகம் சிறக்க, தமிழ் மொழி ஓங்க, அம்மை தருமாம்பாள் அறுபதாண்டு நிறைந்து அழகுற விளங்குவதைப் போன்றே இன்னும் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகின்ருேம். தமிழகம் வாழ்க; அம்மையும் தமிழும் அன்புடன் வழ்ாக.

## அம்மை தருமாம்பாளைக் குறித்துத் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. கூறுவன.

"தருமாம்பாள்: நல்ல பெயர்; பெயருக்கேற்ற இயல்பு: இயல்புக்கேற்ற பெயர்.

டாக்டர் தருமாம்பாள் சித்த மருத்துவர். மருத்துவத் தொழில், அம்மையாரைச் சிறந்த சமூகத் தொண்டராதற்குரிய வாய்ப்பை அளித்த தென்று யான் கருதுகிறேன். அம்மையார் மருத்துவத்தை யான் சுமார் பதினைந்தாண்டுகளாகப் பார்த்து வருகிறேன். அவ்வநுபவம், தருமாம்பாள் மக்களின் உடல் நோய்தீர்க்கும் மருத்துவராக மட்டும் மருவவில்லை என்றும், சமூக நோய் தீர்க்கும் மருத்துவராகவும் மருவுகிருர் என்றும் எண்ணச் செய்தது.

தருமாம்பாள் நிலையத்துக்கு உடல் நோயர்மட்டும் போதருகிருரில்லை; மற்ற நோயரும் போதருகிருர்.

ஏழைமாணுக்கர், திக்கற்றவர், ஒதுக்கப்பட்டவர், வேலையில்லாதார் முதலியோர் போதருகின்றனர். அவரவர் வேண்டுதலைத் தெரிந்து அவரவர்க்குத் தக்க நலம் புரியச் சகோதரியார் அங்கும் இங்கும் அலைவதை என் கண்கள் ஒரு முறையா கண்டன; பலமுறை கண்டன. அவர் தொண்டைக் 'காண்டொறும் காண்டொறும்,' 'நோயாளிக்கே வைத்தியன் வேண்டும்' என்னுங் கிறிஸ்து பெருமான் பொன்மொழி என் நினைவிலுறும். சகோதரியார் தொண்டுக்கென்றே பிறந்து வளர்ந்து வாழ்கிறார் என்று சொல்வது மிகையாகாது.

சாதி மதவேற்றுமை என்னும் நோய் தீர்க்கும் மருந்து கலப்பு மணம் என்னும் முடிவுக்கு வந்தவருள் யானும் ஒருவன். மருத்துவர் தருமாம்பாள் முயற்சியால் கலப்பு மணங்கள் நிகழ்ந்து வருதலைச் சென்னை அறியும். சில மணங்கள் என் தலைமையிலும் நடைபெற்றன. கலப்புமணத்தொண்டர் எவராயினும் அவர் எனது சன்மார்க்க இயக்கத் தொண்டரினத்தில் சேர்ந்தவர் என்று யான் கணித்துக் கொள்வது வழக்கம். தருமாம்பாள் பெயரையும் சன்மார்க்கப் பேரேட்டில் யான் பதித்திருக்கிறேன்.

தருமாம்பாளுக்குத் தாய்மொழிப்பற்று அதிகம். அதனல் அம்மையார் இந்திக் கிளர்ச்சியை முன்னிட்டுச் சிறைக் கோட்டமும் நண்ணினர். அவரது சிறைவாசம் சென்னைப் பெண்ணுலகுக்கு ஒருவிதப் புத்துயிரளித்தது.

## உயர்திரு. டாக்டர்.
## S. தருமாம்பாள் அம்மையார்

அவர்தம் அறுபதாம் அகவையின் துவக்கம் குறித்துப் பெருமகிழ்ச்சி கொண்டு மன்றத்தினர் பாராட்டி அளித்த

## வாழ்த்துரை

விழுமிய குணநலம் கெழுமிய அன்னையீர்! அறிவு பழுத்த அருந்தமிழ் அம்மையே! பெண்குலம் தழைக்கத் தோன்றிய பெருமாட்டியாரே, செந்தமிழ் நாட்டிலே பிறந்து, பைந்தமிழ் மொழிக்கே உழைத்துத் தமிழ் நாடெங்கும் போற்றும் வண்ணம் தனிப்புகழ் நாட்டி மணிவிழாக் கொள்ளும் மாண்புறு நிலைமையில் திகழும் தண்டமிழ்த்தாயே, வணக்கம் பலப் பல. தங்கள் வளர்ச்சி தமிழின் வளர்ச்சி, தமிழ்மக்களின் வளர்ச்சி. பெண்குலக் கொடிகளின் வளர்ச்சி, சீர்திருத்தச் சிகரத்தின் வளர்ச்சியாகும். தாங்கள் இதுகாறும் இயற்றியுள்ள அரும் பெரும் செயல்கள் எங்களனைவர்க்கும் உள்ளக்கிளர்ச்சியினை வளர்த்து வருகின்றன. தங்கள் அருங்குணப்பண்பு தங்களை வாழ்த்துதற்கு எங்களை உந்துகின்றது; இம் முதுமைப் பருவத்தும் தாங்கள் புரியும் தொண்டுகள் எங்களை மகிழ்ச்சியில் திளைக்கவைக்கின்றன; நாங்களும் பெருமிதம் கொள்ளுகின்றோம்.

சங்க காலத்தே தமிழ் நாட்டு மூவேந்தர்களாலும், தனிப்பெரும் புலவர்களாலும், வள்ளல்களாலும், பொதுமக்கள் எல்லோராலும் போற்றி வளர்க்கப்பட்ட நமது பைந்தமிழ் தன்சீரிய இளமை மாறி, செழுமையும் சிறப்பும் மாறி, சீர்குலைந்து தாயில்லாக் குழவியே

போல் கேட்பாரற்றுக் கிடந்த நிலையிலே தாங்கள் எண்ணி எண்ணி ஏங்கிப் பல்வகையானும் முயன்று முடிவில் வீரஉணர்ச்சி கொண்ட கண்ணகியாரே போல் செந்தமிழைக் காக்கப் பெரும்படை திரட்டித் தமிழருக்குப் புத்துணர்ச்சியை அளித்துத் தமிழுக்குத் தனிப் பெரும் பெருமையை மறுபடியும் தேடித்தந்து தமிழ்க்கொடி நாட்டிய பெருமை தங்களுக்கே பெரிதும் உரியது என்பதை நம் தமிழ்நாட்டுச் சரிதமே உரைக்கும். ஆதலின் அருந்தமிழ் மொழிக்கு ஆக்கந் தரவந்த அவ்வையாரே, தங்கட்கு நாங்கள் தங்கள் மணி விழாவை அறுபதாம் அகவையின் துவக்கத்திலிருந்து நிறைவுபெறும் வரையில் நம் தமிழ்நாடெங்கும் கொண்டாட வேண்டும் என்னும் எண்ணம் கொண்டே இந் நன்னாளில் தங்களைப் பாராட்ட முன்வந்துள்ளோம்.

மாணவர் மன்றத்துக்கு மாட்சியினைத் தந்த மருத்துவ மணியே, தங்கள் மருத்துவம் உடல் நோய்க்கு மட்டுமன்றி உள்ள நோயால் வாடி உலகை வெறுக்கும் நிலையில் இருந்த எண்ணிலாப் பெண்மணிகளை நல் வாழ்வு பெறச் செய்ததையும் நாங்கள் நன்கு அறிவோம். தாங்கள் வறுமை நோய்க்கும் மருந்தளிக்க வல்லீர்கள். நாட்டின் நலிவினையும் அடியோடு ஒழிக்க அரும்பாடு படுகிறீர்கள். மக்களின் அறியாமை, மூடப் பழக்க வழக்கங்கள், உயர்வு தாழ்வு வேற்றுமைகள் முதலிய கொடு நோய்கட்கும் தாங்கள் அளிக்கும் நன் மருந்து சிறந்த மருத்துவர்களின் கடமையை நினைப் பூட்டுகின்றது. நமது மாணவர் மன்றம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருதற்கும் தாங்கள் எங்கட்கு அளித்துவரும் அறவுரையும் ஆதரவும் அரிய மூலிகைகளேயாகும்.

உருவும் திருவும் அறிவும் ஆற்றலும் அறநெறிப் பண்பும் உயர்குண அழகும் ஒருங்கே பொருந்திய பெருமாட்டியாரே, தங்கள் அருஞ்செயல்களையும் தன்னலமற்ற பணிகளையும் அன்பின் பொலிவினையும், அருட்குணத்தின் மாண்பினையுங் கண்டு தங்களை நயவாதார் வியவாதார் எவருமிலர். குல வேற்றுமை கொள்கை வேற்றுமை முதலியன சிறிதும் கருதாது பிறருக்கு முன்வந்து உதவும் குணம் தங்கட்கு இளம் பருவம் தொட்டே உண்டென்பது நாடறிந்த செய்தியே யாகும். தங்கள் தளராத முயற்சியால் பதவிபெற்றுத் திகழ்வோரும், பட்டம் பெற்று வாழ்வோரும் கணக்கிலர். தங்கள் அறிவுரை கேட்டு நல்வழிப்பட்டார் பலப் பலர். தங்கள் ஊக்கமும் உழைப்பும் கண்டு, நல்லுணர்ச்சிகொண்டு பொதுநலச் சேவையில் ஈடுபட்டுப் பேரும் புகழும் பெற்றுச் சிறந்து வாழ்வோர் மிகப் பலர். அவர்கள் உயர்வுகண்டு பெற்ற தாயினும் பெரு மகிழ்வு கொள்ளும் தங்கள் அன்பினை என்னென்போம்!

அறிவு விளக்க ஆண்டாகும் அறுபதாம் அகவையினை அடைந்தொளிரும் மணிவிழாத் தலைவியாரே, தங்கள் அறச்செயல்கள் மேன்மேலும் வளர்வதாக. தங்கள் அருங்குணங்கள் எவர்க்கும் எடுத்துக் காட்டாய் இலகுவனவாக. தங்கட்கு எல்லா நலன்களும் இனிதின் வந்தெய்த அதனல் நம் தமிழ்நாடு மேலும் சிறப்பதாக. தாங்கள் நோய் நொடியற்ற நல்ல யாக்கையும் நீண்ட ஆயுளும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்.

இங்ஙனம்
**மாணவர் மன்றத்தினேம்**

மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறைத்
தலைவர்

## அ. கி. பரந்தாமனர் M. A. பாடியது

விருத்தம்

நந்தமிழ் அழியா வாறு
நாடியே சிறைக்குச் சென்று
செந்தமிழ் அந்நாள் காத்த
செல்வியே தருமாம் பாளே
இந்தநாள் தமிழைக் காக்க
இன்னும்நீ அறுப தாண்டு
செந்தமிழ் ஔவை போலச்
சிறப்புற நீடு வாழி!

வெண்பா

அம்மை தருமாம்பாள் ஆற்றும் தமிழ்ப்பணிக்கு
இம்மா நிலத்தில் இணையுண்டோ? — நம்மருமைச்
செந்தமிழ்போல் இன்புற்றுச் சீர்த்திமிக ஆண்டுபல
நன்மையுற வாழ்க நயந்து.

புலவர் தில்லை தா. அழகுவேலன்

## மாணவர் மன்றப் புரவலரும்
## சென்னைத் தமிழாசிரியர் கழகத்தலைவரும் ஆகிய
# புலவர். மயிலை. சிவ முத்து

அவர்களின்

## வாழ்க்கைக் குறிப்பு

### முன்னுரை

"எண்குணத்து முத்தாய் எழிலிற் குமரனாய்
வண்தமிழிற் சாமியாய் வாழ்காளை"

இவ்விரண்டு வரிகளும் பேராசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்களின் வாக்கினின்றெழுந்த ஒரு திருமண வாழ்த்துப்பாவின் முற்பகுதி. மணமகன் நற்குண நல்லொழுக்க முடையார், அழகிய தோற்ற முடையார் தமிழறிவுடைய இளைஞர் எனப் பேராசிரியர் தமதுமாணவருள் ஒருவரது திருமணத்தின்போது அம் மாணவரைப் பாராட்டிக் கூறியுள்ளார். இப்பாராட்டுரையிலிருந்து ஆசிரியரும் மாணவரும் ஒருவரிடத்தொருவர் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் நன்கு விளங்கும். அந்த மாணவர் அன்று ஆசிரியர் மயிலை சிவ முத்துக் குமாரசுவாமி முதலியார் என அழைக்கப்பட்டார். இன்று அன்பர் பலர் அவரைப் புலவர் முத்து என்றும், மயிலை முத்து என்றும், சிவ முத்து என்றும் வழங்குகின்றனர். அவரையே இன்று தமிழ் நாடு முழுவதும் புலவர் மயிலை. சிவ முத்து என்னும் பெயரால் அறிந்து பாராட்டுகின்றது. அவரே இன்று அறுபதாண்டுகள் நிரம்பப் பெற்று உழைப்

பின் உயர்ச்சியாய் நம்மிடையே விளங்குகின்றார். ஆசிரியர் மயிலை. சிவ முத்து அவர்கள் தமிழ் மொழியின் ஆக்கத்துக்கும் தமிழகத்தின் ஏற்றத்துக்கும் ஆற்றிவரும் பணிகள் மிகப் பல. ஆசிரியர் அவர்களின் குண நலங்களையும் அவர் ஆற்றிவரும் பணிகளையும் பாராட்டவும், அவர் இன்னும் பல்லாண்டுகள் நம்மிடையே இருந்து நாட்டுக்கும் மக்களுக்கும் நற்பணியாற்றுமாறு சான்றோர் பலரும் வாழ்த்தவும் இம்மணி விழாவினை இன்று கொண்டாடுகின்றோம்.

### ஆசிரியரின் பிறப்பு வளர்ப்பு

ஆசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் அறுபது ஆண்டுகளுக்கு முன் சென்னையிலேயுள்ள மயிலாப்பூரிலே 14—1—1892 அன்று தம் பெற்றோர்க்கு இரண்டாவது குழந்தையாகப் பிறந்தார். அவர் தந்தை சீர்த்தி வாய்ந்த செம்மனச் செல்வர் மயிலை சிவானந்த முதலியார் அவர்கள். தாயார் அருங்குணம் பலவும் அமையப் பெற்ற திருவுடைச் செல்வி விசாலாட்சி அம்மையார் அவர்கள். ஆசிரியருக்கு முன் தோன்றிய அவர் தமக்கையார் திருமதி புஷ்பாவதி அம்மையார் இன்று மலர்முகத்தம்மையார் என்னும் பெயரால் விளங்குகிறார். தெய்வசிகாமணி என்னும் தம் தம்பியாரை ஆசிரியர் 28 ஆம் ஆண்டில் இழந்து விட்டார். திரு. கிருஷ்ணவேணி அம்மையார் திரு. சௌந்தரவல்லி அம்மையார் ஆகிய தங்கையர் இருவரும் உளர்.

ஆசிரியர் அவர்களின் மூதாதையர் வைக்காடு என்னும் சிற்றூரைச் சேர்ந்தவராயினும், தந்தை சிவானந்த முதலியார் மயிலையையே வாழ்விடமாகக் கொண்டு விஜயநகர மகாராஜா மகளிர் பள்ளியில்

தலைமையாசிரியராகப் பணியாற்றிப் பெருமிதமாக வாழ்ந்து வந்தார். தமக்கு ஒரு மகன் தோன்ற வில்லையே என்ற குறை முதலியார் அவர்களின் உள்ளத்தை ஐந்தாண்டுக் காலம் அலைக்கழித்தது. அவர் முருகப் பெருமானை வேண்டினர். முதலியார் அவர்களுக்குப் பெண் மகவு பிறந்த ஐந்தாண்டுகளுக்குப் பின் ஆசிரியர் தோன்றினர்.

ஆசிரியர் தம் இளம் பருவத்தே வறுமை இன்னதென்பதை அறியாதவர். சொந்த வீடுகளும் தோட்டமும் அன்று அவர் தந்தையாருக்குப் போதிய வருவாயை அளித்தன. அன்னை விசாலாட்சி அம்மையாரும் செல்விருந்தோம்பி வரு விருந்து எதிர்பார்த்து மனையறத்தினை மாண்பு பெற நடத்தி வந்தனர்.

### ஆசிரியரின் இளமை நிகழ்ச்சிகள்

சிறு பிள்ளையாய் இருக்கும் போது ஆசிரியர் அவர்களுக்குக் கதை கேட்பதில் மிக்க விருப்பமுண்டு. நாள்தோறும் தம் தந்தையாரைக் கதை சொல்லும்படி அவர் வேண்டுவார். தந்தையும் அவ்வாறே புராணக் கதைகளையும் ஆங்கிலக் கற்பனைக் கதைகளையும் தம் செல்வ மகனுக்குச் சொல்லிவந்தார். அதோடு கூட "நீ நன்றாகப் படிக்க வேண்டும், படித்துப் பெரும் புகழ் பெறவேண்டும்" என்றும் கூறி வந்தார்.

பிள்ளைப் பருவத்திலிருந்தே எதையும் உற்று நோக்கி ஊன்றியறியும் இயல்பு ஆசிரியரிடத்திருந்தது. மின்னல் ஏன் தோன்றுகின்றது? இடி எப்படி முழங்குகின்றது? சூரியன் இரவில் எங்கே போகின்றது? என்பன போன்ற கேள்விகளை அவர் தம் தந்தையாரைக் கேட்பர். அது மட்டுமன்று தோட்டத்தில் விளையாடும் போதும் அவர் சும்மா இருக்க மாட்

டார். பல இலைகளைக் கிள்ளிச் சுவைத்துப் பார்ப்பார். காய்களைப் பறித்துக் கடித்துப் பார்ப்பார். பூக்களை எடுத்துத் தின்று பார்ப்பார். நல்ல வேளையாக அவர் நச்சுத் தன்மை வாய்ந்த காயிலை பூக்களைச் சுவைக்க வில்லை.

சிறு பருவத்தும் அவர் ஒரு சிந்தனைச் செல்வர். எந்தப் பொருளை எந்த வகையில் செய்யலாம் என்று எண்ணுவர். பலகையை உடைத்துத் தூளாக்கி அறைத்துப் பலப்பம் செய்து தோல்வியுறுவர். தம் வீட்டுத் தோட்டத்திலிருந்த ஒரு வகை மஞ்சள் பூக்களைப் பறித்து நீரிலிட்டுக் கரைத்து அது கொழ கொழப் பாவதைக் கண்டு விளக்கு நெய் செய்யக்கூடும் என்றெண்ணி ஏமாறிப் போவர்.

இளமைப் பருவத்திலே வேடிக்கையாக விளையாடு வதில் பெருவிருப்புடையவர் ஆசிரியர். பிறரை ஏமா றச் செய்தும் கேலிச் சொற்கள் கூறியும் அவர் வருந்து வதைக் கண்டு தாம் மகிழ்வர். இவ்வியல்பு அவரது இளம் பருவத்துடனே மறைந்தது. இன்று அவரது மனப்பண்பு முற்றிலும் வேறு பட்டது. பிறர் துன்பம் காணப் பொறாதது; கண்டவிடத்து உதவி செய்யும் இயல்புடையது.

### கல்விப் பயிற்சி

ஆசிரியர் அவர்கள் முதலில் சிறு ஆரம்பப் பள்ளி யிலும் பின்னர் வெஸ்லி கல்லூரியிலும் கல்வி பயின் றார். அக்காலத்தே அவருக்குக் கல்வியிலிருந்த கருத்தைவிட விளையாட்டின் மீது இருந்த விருப்பமே அதிகம். ஆயினும் பள்ளித் தேர்வுகளில் போதுமான மதிப்பெண்கள் பெற்று மேல் வகுப்பு மாறி வந்தார். நாளாக நாளாகக் கல்வியில் இவர்க்குக் கருத்துத்

தோன்றியது. அதே நேரத்தில் இவர் தந்தையாரும் மூப்பின் காரணமாகத் தம் ஆசிரியத்தொழிலை யிழந்து பிணியுற்றார். வருவாய் குறைந்து வறுமை தலை காட்டத் தோன்றியது. கையிலிருந்த பொருளும் சிறிது சிறிதாய்க் கரைய ஆரம்பித்தது. தாயாரோ தாராள மனப் பான்மை கொண்டவர்; சிக்கனம் அறியாதவர். எனவே வறுமையின் காரணமாகத் தம் செல்வ மகனை மேலும் படிக்க வைக்க வகையற்றவரானார் தந்தை. சிறிது நாட்களுக் கெல்லாம் பிணிவாய்ப் பட்டிருந்த அவர் இயற்கை யெய்தினார். தந்தையாரின் பிரிவு ஆசிரியர்க்குப் பெருந் துன்பத்தை யளித்தது. குடும்பத்துக்குப் பெரிய பிள்ளையாதலின் அதனைக் காக்கும் பொறுப்பும் அவரைச் சேர்ந்தது. வறுமை ஆசிரியரது பள்ளிக் கல்விக்கு ஏழாம் வகுப்போடு முற்றுப் புள்ளி வைத்து விட்டது. முதலியார் அவர்களின் மறைவுக்குப் பின் ஆசிரியரது குடும்பம் மயிலையை விட்டுப் பெத்து நாய்க்கன் பேட்டையை வந்தடைந்தது.

ஓவிய மெழுதுவதில் தம் மைந்தனுக்கிருந்த திறமையை அறிந்த தாயார் ஆசிரியரை ஓவியக் கல்விச் சாலைக்கு அனுப்பிப் பயிற்சி பெறச் செய்தார். ஆனால் மேலும் கற்க வேண்டும் என்னும் ஆவலும், தாம் கல்வியிற் சிறந்து புகழொடு தோன்ற வேண்டும் என்னும் ஆர்வமும் இவர் மனத்தை விட்டு அகலவில்லை.

### வறுமை வாழ்க்கை

ஓவியக் கல்விச் சாலையில் பயற்சி பெறுங்கால் இவர் பெத்து நாய்க்கன் பேட்டைக்கும் எழும்பூருக்கும் இடையிலுள்ள தூரத்தைக் கால் நடையாலேயே கடக்க வேண்டியிருந்தது. பகலுணவுக்கும் சிறிது எளிய

உணவையோ அல்லது சிற்றுண்டியினையோ எடுத்துச் சென்றார். இச் சமயத்தில் வறுமை இவர்தம் குடும்பத்தைப் பெரிதும் வாட்டியது. இவர் தேவாரம் திருவாசகம் பாடப் பயின்ற காலமும் இதுதான். தமது இனிய குரலெடுத்து ஆசிரியர் பாடுவதைக் கேட்க எல்லோரும் விரும்புவர். அவர்களுள் ஒருவர் திரு. சரவண முதலியார் அவர்கள். இவர் ஆசிரியர்க்கு ஒரு வழிகாட்டியாக இருந்து அவருக்குப் பல வகையிலும் ஆறுதல் கூறிவந்தார். அவரே ஆசிரியர்க்குச் சோதிட நூல் கற்பித்து அதற்கு ஏற்ற பயிற்சியையும் அளித்தவர்.

சித்திரப் பயிற்சியில் தேர்ச்சிபெற்ற பின் ஆசிரியர் சிறிதுகாலம் அச்சுக் கோக்கும் வேலையில் அமர்ந்தார். இத்தொழில் அவர் மனதுக்கு ஏற்றதன்று; ஆயினும் குடும்பநிலை இவர் அத்தொழிலை மேற்கொள்ளச் செய்தது. இவர் வருந்தி உழைத்துப் பொருள் ஈட்டித் தம்குடும்பத்துக்கு உதவினார். நாள் செல்லச் செல்ல இத்தொழிலில் ஆசிரியர்க்கு வெறுப்புத் தோன்றியது. அவர் புலவர் வள்ளல் காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார் அவர்களின் துணை கொண்டு சென்னைச் சைதாப்பேட்டையிலுள்ள ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறச் சென்றார். இராக் காலங்களில்தான் அவருக்கு ஓய்வு உண்டு. இந்த ஓய்வு நேரத்தில் புராணிகர் சிதம்பரம் வடிவேற்பிள்ளை அவர்களின் புராணப் பிரசங்கங்களைக் கேட்கச் செல்வர். இரவில் கண் விழித்தமையால் மறுநாள் பகற்போதில் உறங்குவதைத் தவிர்க்க அவர் மூக்குத்தூள்போட ஆரம்பித்ததும் இந்தக்காலம்தான். அப்போது அவருக்கு வயது பதினாறு அல்லது பதினேழு இருக்கும்.

ஆசிரியப்பயிற்சி பெற்றபின் இவர் சென்னைக் கொண்டித் தோப்பிலுள்ள சைவ ஆரம்பப் பள்ளியின் தலைமையாசிரியரானர். இவரைத் தலைமை ஆசிரியராகப் பெற்ற உடனே அந்தப்பள்ளி பெரும் மாறுதலடைந்தது. சுவர்களிலெல்லாம் அழகிய சித்திரங்கள் தோன்றின. பலநீதிக் கதைகளையும் பொது அறிவுப் பாடங்களையும் இவர் அந்தச் சித்திரங்களைக் காட்டிக் காட்டிக் கற்பித்தார். பள்ளித்தோட்டம் செடி கொடிகளோடும் பூ காய்களோடும் சிறந்து விளங்கியது. மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதில் அவர் பல புதிய முறைகளைக் கையாண்டார். அவர்கள் கல்வியில் சிறந்துவிளங்கத் தாம் பேரூக்கம் காட்டினர். பள்ளியில் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகமாயிற்று. ஆசிரியர் அவர்களின் கையெழுத்து அப்போது மிக நன்ருக இருக்கும். தம்மைப் போலவே தமது மாணவரும் அழகாக எழுதும் ஆற்றலைப் பெற வேண்டுமென முயற்சித்தார். இவை யாவும் அப் பள்ளியை நடத்திவந்த சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார்க்கும் பள்ளியின் அலுவல்களை முன்னின்று நடத்திய பெரியார் இருக்கம். ஆதிமூல முதலியார் அவர்களுக்கும் பெருமகிழ்ச்சியை விளைவித்தன.

## ஆசிரியர் தமிழறிவு

ஆரம்பப் பள்ளியின் தலைமையாசிரியராக இருந்த போதே ஆசிரியர் அவர்கள் தமது ஆங்கிலக் கல்வியறிவைச் சிறிது சிறிதாக வளர்த்துக் கொண்டு நாளடைவில் **மில்டன், ஷெல்லி, கீட்ஸ், கோல்ட்ஸ்மித், டென்னிசன், ஷேக்ஸ்பியர்** முதலிய ஆங்கிலப் பேராசிரியர்களின் எழுத்தோவி

யங்களைக் கற்றுணரும் ஆற்றல் பெற்றார். அதோடு கூட அவர் தமிழ்க்கல்வியில் தனிப்பட்ட ஆர்வம் பெற்றிருந்தார். இந்த ஆர்வத்தினைக் கண்டும் இனிய குரலில், இவர் பாடிய தேவார திருவாசகங்களைக் கேட்டும் பேராசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் தமது அன்பை இவர்பாற் செலுத்தினர். அன்றுமுதல் இருவரும் ஆசிரியரும் மாணவருமாயினர். ஆசிரியர். சிவ முத்து அவர்கள் தம் பேராசிரியரிடத்துப் பல அரிய தமிழ் நூல்களைப் பயின்று நிறைந்த தமிழறிவைப் பெற்றார். இத் தமிழறிவு இவரது 25-ஆம் வயதில் இவரைச் சென்னை முத்தியாலுப் பேட்டை உயர் நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகக் கொண்டு சென்றது.

ஆசிரியத் துறையில் இருந்த போது இவர் பேராசிரியர் காவேரிப்பாக்கம் நமச்சிவாய முதலியார் அவர்களிடத்தும் மறைமலையடிகளாரிடத்தும் நெருங்கிப் பழகினர். அவர்களும் மிக்க இளவயதிலே இவர் பெற்ற தமிழறிவைக் கண்டு வியந்தனர். ஆசிரியர் தமிழாசிரியர்களுட் சிறந்து விளங்கினர்; பள்ளி மாணவர்களின் பேரன்பையும் பள்ளித் தலைவர்களின் பெருமதிப்பையும் பெற்றார்; பல்லாண்டுகள் பணியாற்றித் தமது 54-ஆம் வயதில் 1947-ஆம் ஆண்டில் ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்றார்.

**ஆசிரியர் குண நலங்கள்.**

இளகிய மனமும், பொறுமையும், மெய்ம்மையும், மிக்க பெருந்தன்மையும், தம் அணிகலன்களாகக் கொண்டவர் ஆசிரியர் சிவ முத்து. அவர்கள். பிறர் துன்பத்தை இவர் காணப் பொறுதவர். முன் பின் பழக்க மில்லாதவராயினும் ஒருவர்க்கு ஏதாவதொரு

இடுக்கண் நேர்ந்த காலத்து விரைந்து தம்மாலான உதவி புரியும் சிறந்த இயல்பு இவரிடத்து மிகுதியும் அமைந்திருக்கின்றது. பிறர் தமக்குத் துன்பம் செய்த காலத்து ஆசிரியர் முதலில் அவர்கள் மீது சினந்து கொள்வராயினும் 'விற்பிடித்து நீர் கிழிய எய்த வடுப் போல' அவரது சினம் மறைந்துவிடும். பிறர் பிழையைப் பொறுத்து அவரை மன்னித்து அவரோடு அளவளாவும் பெருந்தகைமை ஆசிரியரின் அருங்குணங்கள் பலவற்றுள் ஒன்று. தமக்குத் துன்பம் நேர்வதாயினும் அவர் எப்போதும் உள்ளதை உள்ளபடியே கூறுவர். எப்போதாவது மற்றவர்களுக்காக உண்மையை மறைக்க நேர்ந்தால் **பாண்டவ தரும** முறையில் இருபொருள்படப் பேசுவார்.

இவரது உள்ளம் தாயுள்ளம் போன்றது; எளிதில் இளகும் தன்மையது. அன்பர் பலர் இவரைக் குழந்தையுள்ளம் படைத்தவர் எனவும் கூறுவர். ஆனாலும் இதற்கு முற்றிலும் மாறான மனத் திண்மையும் உடையவர் ஆசிரியர். எடுத்த செயலை எதிர்ப்புக்கு அஞ்சாது ஏற்படும் இன்னல்களைப் பொருட்படுத்தாது மன உறுதியோடு செய்து முடிக்கும் ஆற்றல் இவரிடத்து மிகுதியும் உண்டு.

இவரது தாராளகுணம் பெருஞ் செல்வரிடத்தும் காண்பதரிது. தமக்கில்லையாயினும் பிறர்க்குக் கொடுத்துதவும் பண்பு இவரிடம் ஒரு முறை இரு முறை அல்ல — அடிக்கடி காணக் கூடிய ஒன்று. ஒரு சமயம் ஒரு தமிழறிஞர் ஆசிரியர்பால் வந்து உதவி பெற்றுச் செல்லும்போது சிறிது தூரம் சென்றபின் "இவர் ஒரு புலவர் வள்ளல். வறுமை இவரையும் விடவில்லை" எனக்கூறிச் சென்றார்.

மிகச் சிறந்த வகையிலே தம் வாழ்க்கையை நடத்த வேண்டுமெனத் தம் இளமையிலே எண்ணி யிருந்த ஆசிரியர் எளிய வாழ்க்கையை விரும்பி மேற் கொண்டார். அவருடைய உடையும் நடையும் படா டோபமற்றவை. அவர் கொள்ளும் உணவு மிக மிக எளியது. ஒரு வேளைக்கு ஓரணு அல்லது இரண்டணு விலை மதிப்புள்ள உருளைக் கிழங்கோ, காராபூந்தியோ ஓமப்பொடியோ அல்லது பகோடாவோ அவரது உணவாகும். அரிசி கோதுமைகளினல் செய்யப், பெற்ற எந்தப் பொருள்களையும் அவர் கொள்வ தில்லை. இனிப்புப் பொருள்களும் காப்பி, தேனீர் முதலியவைகளும் இவரால் விலக்கப் பெற்றவை. சிற்சில சமயங்களில் மோர் சாப்பிடுவார். இத் தகைய எளிய உணவைக் கொண்டாலும் அவர் உழைக்கச் சலித்ததில்லை. அவரிடத்துக் காணும் உழைப்பும் உற்சாகமும் இளைஞர்களிடத்தேயும் காண் பதரிது. இந்த முதுமைப் பருவத்திலும் அவர் இரவென் றும் பகலென்றும் பாராது உழைக்கும் உழைப்புக்கு அளவில்லை. ஆனாலும், தமக்குற்ற துன்பத்தைத் தம் மோடு நெருங்கப் பழகுபவர்களுக்குக் கூட அறிவிக்க மாட்டார். தாம் நோய்வாய்ப்படினும் பிறர் வலுக்கட் டாயத்தின் மீதுதான் மருந்துண்பார்.

இந்த நிலையிலே இருந்து ஆசிரியர் அவர்கள் தமிழ் மொழிக்கும், தமிழ் மக்களுக்கும் தமிழ் நாட்டுக் கும் பணியாற்றுகின்றார் என்றால் அவர் மொழிப் பற்றினையும், அன்பின் தன்மையினையும் நாட்டுப் பற்றினையும் என்னென்றியம்புவது?

## ஆசிரியர் ஆற்றிய பணிகள்

### மாணவருக்கு

மாணவர்கள் வருங்கால மணிகளாய்த் திகழ வேண்டும் என்னும் உயரிய நோக்கத்தைக் கொண்டு பணியாற்றியவர் ஆசிரியர் மயிலை சிவ. முத்து. அவர்கள். ஆங்கிலக்கல்வியே யன்றித் தமிழ்க் கல்வியிலும், கல்வியே யன்றி ஒழுக்கத்திலும் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டுமென்பது அவர் எண்ணம். எனவே மாணவர்கள் மனத்தைக் கவரும் வகையில், அவர்களுக்கேற்ற நீதிகளை யுடையனவாய்ப் பல புத்தகங்கள் எழுத அவர் எண்ணினர். அங்ஙனமே தம் இருபத்தைத்தாம் வயதில் ஆசிரியத் துறையில் தமக்கிருந்த அனுபவத்தைக் கொண்டு பல பாடப் புத்தகங்களையும் கதைப் புத்தகங்களையும் எழுதினர். அவர் முதல் முதல் இயற்றிய நூல் "என் இளமைப் பருவம்" என்னும் ஓர் அரிய அழகிய இனிய கதைப்புத்தகம். தம்மிடம் கல்வி பயிலும்வாய்ப்புப் பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஏற்ற காலத்தில் தக்க அறிவுரை கூறி அவர்களைச் சீர்ப்படுத்திய பெருமை ஆசிரியருக்குண்டு. இன்றும் அவர் மாணவர் நலங் கருதி அவர்கள் நல்ல கையெழுத்து எழுதப் பழகவும் கதை, கட்டுரை முதலியன எழுதப் பழகவும் பொதுவாகத் தமிழ் மொழியில் ஏற்றம் பெறவும் ஊக்கம் அளிக்கின்றார்.

### தமிழ் மொழிக்கு

ஆசிரியர் அவர்களுக்கு இன்று உரிமையாக உள்ள சொத்து ஒன்றுதான். அதுதான் அவர் உள்ளத்து ஊறி நிற்கும் தமிழ்ப் பற்று. தமிழ் தமிழ் என்றே அவர் இதுகாறும் வாழ்ந்து விட்டார். இன்று தமிழ் வளர்க்கும் இயக்கங்கள் பல அவர் தொடர்பு

பெற்றுள்ளன. ஆங்கில மொழியிற்போலத் தமிழ் மொழியிலேயும் பல சிறந்த சிறு புத்தகங்கள் அழகிய வடிவிலே வெளி வராமை குறித்து அவர் பெரிதும் வருந்துவார். ஆசிரியர் அவர்களின் கருத்துணர்ந்த திரு. பழனியாண்டிப் பிள்ளையவர்கள் தம் பெயரால் அமைந்த பதிப்பகத்தின் மூலமாக ஒன்றுமுதல் ஐந்து வகுப்புவரைப் பயிலும் மாணவர்களுக்காக ஆசிரியர் அவர்களால் எழுதப்பெற்ற "நித்தில வாசகம்" என்னும் புத்தக வரிசையினைப் புத்தம் புதிய முறையில் அச்சாக்கி வெளியிட்டு ஆசிரியரின் இந்தக் குறையை நீக்கினர். மேலும் திருந்திய முறையில் ஆசிரியர் அவர்கள் ஏறத் தாழ முப்பது புத்தகங்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இது தவிரப் பத்திரிகை யுலகிலும் அவர் சில காலம் வாழ்ந்ததுண்டு.

பேராசிரியர் மணியரசர் அவர்களைத் தலைவராகக் கொண்ட சென்னைத் தமிழ்ச் சங்கம் பல துறைகளிலும் சிறந்து விளங்கியது. அச்சங்கத்தின் இயற்றமிழ்ப் பகுதியில் ஆசிரியர் அவர்களும் பாரிப்பாக்கம் திரு. கண்ணப்ப முதலியார் அவர்களும் அமைச்சராக இருந்து அதனைத் திறம்பட நடத்தி வந்தனர். அதற்காக அவர் தம் மாணவர்களைக் கொண்டு பொங்கல் விழாவில் நிதி திரட்டிச் சங்கத் தலைவரிடம் அளித்தார்.

தமிழ் நாட்டிலே 1938-ஆம் யாண்டு சென்னை அரசியலாரால் இந்திமொழி கட்டாய பாடமாக்கப்பட்ட போது தாய் மொழியே கட்டாய பாடமல்லாத அக் காலத்தே பிற மொழி கட்டாய பாடமாக்கப்படுவது தாய் மொழியைக் கொடுமைப் படுத்துவதாகும் என்பதை ஆசிரியர் வெளிப் படையாக எடுத்துக் கூறினர். மெய் வருத்தம் பாராமலும் பசி நோக்காமலும் தம்

சொந்தப் பொருட் செலவைக் கருதாமலும் அவர் அப்போது தமிழ் மொழிக்காக உழைத்த உழைப்பினை அவரோடு சேர்ந்து உழைத்த அனைவரும் நன்கறிவர். ஆசிரியர்க்குத் தமிழ் மொழியே மூச்சு என்பது அப்போதுதான் பலர்க்குத் தெரிந்தது.

**தமிழாசிரியர்க்கு :**

தமிழாசிரியர்களின் எளிய நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் சென்னை பண்டித சங்கம், தமிழ்ப் பண்டித சங்கம், வித்துவான் சங்கம் முதலிய கழகங்களில் அமைச்சராகவும் துணைத்தலைவராகவும் இருந்து புலவர் நிலையினை அரசாங்கம் அறியும் வகையில் வெளிப்படுத்தினர். இம்முயற்சிகளால் பயன் போதிய வகையில் கிட்டாமை கண்டு அவர் பெரிதும் வருந்தினர்; அவர்களின் நிலை திட்டமாக உயரவேண்டும் எனத் தம் மனத்துள் எண்ணினர். கடைசியில் ஆசிரியர் அவர்களையே தலைவராகக் கொண்ட தமிழாசிரியர் கழகம் தோன்றிற்று. இக்கழகத்தின் வாயிலாகச் சென்னையிலுள்ள பள்ளிகளுக்கு அவர் நேரிற் சென்று அங்குள்ள தமிழாசிரியர்களைக் கண்டு அவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்தார். தமிழ் நாட்டில் தாய்மொழி யாசிரியர்கள் பிறமொழி கற்பிக்கும் ஆசிரியர்களிலும் ஊதியத்தில் எய்தியிருக்கும் அவல நிலை குறித்து ஆசிரியர் அடிக்கடி கூட்டங்கள் கூட்டிப் பேசினர். அவ்வப்போது கல்வி யமைச்சரை நேரிற் கண்டு குறையறிவித்தார். பயனென்றுங் காணமையால் இனித் தமிழாசிரியர்கள் "துக்கவாரம்" கொண்டாடுவதைத் தவிர வேறு வழியில்லையென அறிக்கை விட்டார். அங்ஙனமே மாநில முழுதும் தமிழாசிரியர்

கள் "துக்கவாரம்" கொண்டாடினர். இந்நிகழ்ச்சி கல்வி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. சட்ட சபையிலும் பரபரப்பு ஏற்பட்டது. அதன் பலனைக இன்று சில தமிழ்ப் புலவர்களேனும் சமமாகப் பாராட்டப்பெற்று ஊதியத்திலும் அவர்களுடன் உயர்வு பெற்றனர். தமிழாசிரியர்களின் திரண்ட ஒத்துழைப்பு அவ்வாசிரியர்களுக்காகப் பாடுபடும் புலவர் மயிலை சிவமுத்து அவர்களுக்கு இந்த முதிய வயதில் ஒரு ஊன்றுகோல் போல உதவும் என்பதைத் தமிழாசிரியர் எவரும் அறிவர்.

**தமிழுலகுக்கு:**

"தமிழர் பண்பாடுகள் தலை சிறந்தவை. தமிழர் நிகழ்ச்சிகள் யாவும் தமிழ் நெறியில் நடத்தல் வேண்டும்" என்னும் ஊன்றிய கருத்துக் கொண்டவர் ஆசிரியர். அதற்காகவே திருமணம், நீத்தார் கடன் முதலிய நிகழ்ச்சிகளில் பொருள் விளங்காப் புரோகித முறையை விலக்கி மக்கள் தமிழ் மொழியிற் சடங்குகளை நடத்துவதை ஆதரித்தார். முதன்முதலாகத் தமிழ்த் திருமணம் செய்து கொண்ட மிகச் சிலருள் ஆசிரியர் ஒருவர். திருமண அழைப்பும் முதன்முதலில் தூய தமிழ் மொழியில் வெளியிட்டவரும் அவரே. இவர் திருமணத்தின்போதுதான் புரோகித ஒழிப்புச் சங்கமும் ஏற்பட்டது. இன்று சென்னையில் மட்டுமேயன்றி வெளியூர்களுக்கும் சென்று தமிழ்த் திருமணங்கள் செய்துவைக்கின்றார். தமிழர் திருமண மாநாட்டிற்கு உதவி புரிந்தவர்களுள் இவரும் இன்றியமையாத ஒருவர். இதனல் தமிழுலகு பொருளற்ற பழமை நீங்கிப் புத்துயிர் பெற்று விளங்குகின்றது.

**மாணவர் மன்றத்துக்கு:**

சில இளைஞர்களால் துவக்கப்பட்ட மாணவர் மன்றம் இன்று இருபதாண்டுக் குழந்தை. இக் குழந்தையின் மூச்சு புலவர் மயிலை சிவமுத்து எனல் மிகையாகாது. நடுத்தரமான உயரம், மாநிறம், உழைப்பும் சிந்தனையும் காட்டும் முகம், குறுகுறுத்த பார்வை ஒழுங்காகச் சீவப்படாத தலைமயிர்; ஒரு கையில் ஒரு தடி; மற்றொரு கையில் ஒரு பை; எளிய ஆடை இவையே ஆசிரியர் அவர்களை அறிவிக்கும் அடையாளங்கள். ஆசிரியரது கையைவிட்டு அகலாத அந்தப் பை அவர் தம் வாழ்க்கைக் குறிப்பினும் குறிப்பிடத் தக்கது. அந்தப் பையில் வழியில் ஒய்வு கிடைத்தபோது பதில் எழுத வேண்டிய மன்றக் கடிதங்கள் இருக்கும்; மன்ற ஆண்டறிக்கைகளும் அழைப்பிதழ்களும் சில இருக்கும். எங்கோ ஒரு புலவர் தம் ஊதியக் குறைவு பற்றிய துன்பச் செய்தியைக் குறித்த கடிதம் இருக்கும்; அடிக்கடி கையாண்டதன் பயனாய் அலுத்துப்போன ஒரு பணப் பை இருக்கும்; வர்ணப் பென்சில்கள் இருக்கும்; அன்று வெளிவந்த செய்தித் தாள் இருக்கும். இவ்வளவும் அடங்கிய அந்தப் பை இரண்டு மூன்று வீசை எடை இருக்கும். தமிழுக்காகவே தமிழாசிரியர்கட்காகவே உழைக்கும் ஆசிரியர் இந்தப் பையினைத் தம் சுவாசப் பையாகக் கருதினாலும் தவறு என்ன இருக்கின்றது? ஒரு கையில் தடியும் மறு கையில் பையுந் தாங்கி உரத்த குரலில் அன்பர்களுடன் பேசி வருபவர் புலவர் மயிலை சிவமுத்து அவர்களே என்பது கொண்டித்தோப்பிலுள்ள எல்லோருக்கும் தெரியும், அவர் தொலைவில் வரும்போது “வாத்தியார் வருகிறார்” என மன்ற அலுவலகத்தில் உள்ளோர் கண்டு கொள்வர்.

மேற் குறிப்பிட்ட கோல மனைத்தும் ஆசிரியர் அவர்கள் விரும்பிப் பெற்ற வறுமைக் கோலம். பகட்டான தோற்றத்தால் பலர் ஓடி ஓடிச் செய்யும் செயல்களை ஆசிரியர் அவர்கள் எளிய தோற்றத்தால்-உண்மை உழைப்பினல் நடந்து நடந்தே செய்வர்.

சென்னைக் கொண்டித்தோப்பு இரத்தின முதலி தெருவில் இரவு பத்து மணிக்குமேல் மக்கள் யாவரும் அயர்ந்து தூங்குவர். ஆனல் 17-ஆம் எண்ணுள்ள வீட்டுப் பலகணி வழியாக நள்ளிரவில் விளக்கொளியில் ஒரு முதியவரைப் பார்க்கலாம். அவரே புலவர் மயிலை. சிவமுத்து அவர்கள். அந்த நேரந்தான் ஆசிரியர்க்குச் செய்தித் தாள்களையும், புத்தகங்களையும் படிப்பதற்கும், மன்றத்தின் அன்ருட வரவு செலவுக்கணக்குகளை எழுதுவதற்கும் ஒய்ந்த நேரமாகும். பொழுது விடிந்ததும் மன்றக் கடிதங்களைக் கவனித்தல், அவைகட்குப் பதில் எழுதுதல், தம்மைக் காண வந்தவர்களுடன் பேசி அவர்கட்கு வேண்டுவன செய்தல், மன்ற வளர்ச்சிக்குப் பல்வகையாலும் உதவும் அன்பர்களிடம் சென்று அளவளாவுதல் ஆகிய இவைகளே அவரது அன்ருட வேலைகள்.

இவ்வாறு ஆசிரியர் இரவு பகல் பாராமல் வெயிலென்றும் மழையென்றும் நோக்காமல் மன்ற வளர்ச்சியையும் அதன் வாயிலாகத் தமிழ் வளர்ச்சியையும் அதன் வாயிலாக மாணவர் முன்னேற்றத்தையும் அதன் வாயிலாகத் தமிழ் நாட்டு முன்னேற்றத்தையும் தம் குறிக்கோளாகக் கொண்டு அரும்பாடு பட்டு உழைக்கின்ருர். அவர் உழைப்பின் பெருமையைத் தொலைவிலிருந்து பார்ப்பவர்கள் அறிந்துகொள்ள முடியாது. அருகிருந்து பார்ப்பவர்களுக்கு அவர்

உழைப்பு தெரியாமற் போகாது. அதை அவர்கள் மறக்கவும் முடியாது.

தாம் நோயுற்ற காலத்தும் மன்றப்பணிகளை அவர் புறக்கணிப்பதில்லை. காய்ச்சல் அடித்துக் கொண்டிருக்கும்; இடைவிடாது இருமிக் கொண்டிருப்பார்; அதுபோதும் இக் கடிதத்துக்குப் பதில் எழுத வேண்டும். அந்தப் புலவர் யாது எழுதியுள்ளார்? இன்னின்ன செயல்களை எவ்வெவ்வாறு செய்யலாம் எனக் கேட்டு அவன செய்வார். இதுபற்றியே மன்றத்தின் உயிர் நாடி அவர்; எனப் பெருமையோடு கூறிக் கொள்கின்றோம்.

## ஆசிரியரின் சிறப்பியல்புகள்

புலவர் மயிலை. சிவமுத்து அவர்கள் ஓர் அற்புத மனிதர் என்பதை அவருடன் நெருங்கிப் பழகுவோர் நன்கு அறிவர். குழந்தையின் உள்ளமும், போர் வீரனின் தறுகண்மையும், அறிஞனின் பேச்சும், தியாகியின் செயலும் அவர்தம் வாழ்க்கையில் சிறந்திருக்கக் காணலாம். அவர் கள்ளங் கபடமற்ற வெள்ளையுள்ளம் படைத்தவர். ஆனல் அவரை ஒருவராலும் ஏமாற்றி விடவும் முடியாது. ஒருகால் ஏமாற்றுவோரின் மன அமைதிக்காக அவர் ஏமாறுவது போல் விட்டுக்கொடுப்பார். அவரவர் உள்ளத்தை அளந்தறியும் உளநூல் வல்லார் அவர்; மலையனைய துன்பம் வரினும் நிலையில் திரியாது நிற்கும் உள்ள உறுதி படைத்தவர்; மாணவர்களேயாயினும், அவர்களை அடக்கியாள நினையாமல் சமத்துவமாகவே நடத்துவார். நண்பர்கள் சிலராகவே இருத்தல்வேண்டும், எக்காரணத்தை முன்னிட்டும் அவர்களை விட்டுப் பிரியலாகாது என்பது அவர்தம் சீரிய கொள்கையாகும்.

ஆண் பெண் சமத்துவம் வேண்டும்; ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி கூடாது என்பதை நடைமுறையில் செய்து காட்டியவர்களில் ஆசிரியரும் ஒருவர். தம் மக்களில் ஆண் மக்களைப் போலவே பெண் மக்களையும் படிக்க வைத்தார்.

ஆசிரியர் அவரவர் விரும்பும் உரிமையில் ஒரு போதும் குறுக்கிடுவதில்லை; மைந்தனேயானாலும் அடக்கியாள விரும்பாமல் அவன் விருப்பப்படியே விட்டு விடுவார். அவர் குழந்தைகளிடம் எப்போதும் அன்பு பூண்டு ஒழுகுவார். பேசும் குழந்தைகளுடன் அவர் குறும்புக் கேள்விகள் கேட்டு விளையாடுவதைப் பார்க்கப் பார்க்க இன்பமாய் இருக்கும். இன்றும் இக்காட்சியைக் காண்போர் "இவர் அறுபது வயதுக்குழந்தை போலும்" என்று கூறிச் செல்வர். சிறு குழந்தைகளிடமும் பெரும் உண்மைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்பது அவர்தம் கருத்து. எத்தகைய ஆராய்ச்சியிலும் தவறுதல் நேருவது உண்டு. ஆதலால் எதையும் விடாப்பிடியாகக் கொள்ள மாட்டார் "நமக்குமேல் ஒரு பொருள் உண்டு. அதன் உண்மையைத் தெரிதல் வேண்டும். உழைத்தால் அதனைப் பெறலாம்" என்னும் உள்ள உறுதியும் நம்புலவர்பால் குடி கொண்டுள்ளது.

## வாழ்த்து

மன்றத்தின் புரவலர் மயிலை சிவ முத்து அவர்களைப் புலவர் மணி, தமிழாசிரியர் தந்தை, சீர்திருத்தக்காரர், புரட்சிக்காரர், சமயச் செல்வர், குழந்தைகள் நண்பர்என எங்ஙனம் பாராட்டினாலும் பொருந்தும். அவர் தமக்கென வாழவில்லை; பிறர்க்கென வாழ்கின்

ரர். அவர் வாழ்வு தமிழர் வாழ்வு; தமிழாசிரியர் வாழ்வு. எனவே தமிழ் வளரவும் தமிழர் வாழவும் தமிழாசிரியர் வாழவும் ஆசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் நம்மிடையே பல்லாண்டுகள் வாழுமாறு மனமார வாயார வாழ்த்துகின்றோம், வாழ்க புலவர் முத்து; வளர்க தமிழ்; வாழ்க தமிழர்.

புலவர். மயிலை. சிவமுத்து அவர்களைக்குறித்து

## தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள்

### வாழ்க்கைக் குறிப்பில் கண்டவை.

"சென்னையில் பாலசைவசபை என்றொன்று சிலகாலம் நல்ல தொண்டு செய்தது. அச்சபை சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் கிளையாய் விளங்கியது. அதன் வாயிலாகத் தமிழிலும் சைவத்திலும் பண்பட்டவர் மயிலை. சிவமுத்துக்குமார சுவாமி முதலியார். அவர் இளமையிலேயே மனச்சான்று வழி நடப்பவர் என்பதை அவர் தம் நடக்கையால் யான் உணரலானேன். அத்தகைய ஒருவரது பின் வாழ்க்கையில் உரிமை மணம் கமழ்தல் இயல்பு. இந்நாளில் முத்துக் குமாரசுவாமி முதலியார் வாழ்க்கை உரிமை உணர்வில் வளர்ந்து வருதல் கண்கூடு.

முத்துக்குமரரின் பேச்சையுங் கேட்டிருக்கிறேன். எழுத்தையும் பார்த்திருக்கிறேன். அவைகளில் உண்மையும் எளிமையும் தெளிவும் பொலிதல் கண்டு யான் மகிழ்வதுண்டு.

சாதி மதம் முதலிய வேற்றுமைகளைத் தொலைக்க வல்லது கலப்புமணம் என்பதவர் கொள்கை. இக்கொள்கையை யான் பேச்சாலும், எழுத்தாலும், ஒல்லும் வகை செயலாலும் பரப்பி வருதல் நாட்டவர்க்குத்தெரியும். எனது கொள்கைக்குத் துணை போகும் முறையில் அன்பர் முத்துக்குமாரசாமி முதலியாரின் தொண்டும் நிகழ்ந்து வருதலை ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கிறேன். சீர்திருத்த மணத்தில் அவருக்கும் எனக்கும் ஒருமைப் பாடுண்டு.

சிவ. முத்துக்குமாரசாமியின் பணி விளம்பரமற்றது; அமைதியில் நிகழ்வது. தென்னாட்டில் தோன்றிய ஹிந்தி எதிர்ப்பியக்கத்துக்குச் சென்னையில் மூளையாயிருந்து பெரும் பணியாற்றியவர் முத்துக்குமாரர் என்பது சிலர்க்கே தெரியும். அச் சிலருள் யானும் ஒருவன். விளம்பரமற்ற தொண்டினை, என்மனம் போற்றுவது இயற்கை.

முத்துக்குமாரருடன் பிறந்தவர் ஒருவரிருக்கிறார். அவர் பெயர் மலர்முகத்தம்மாள் என்பது. தம்பியார் தொண்டுக்குத் தமக்கையார் துணையும் அரண் செய்து வருகிறது. இந்தி இயக்கத்தில் சிறை சென்றவர் அம்மையார்.

**கல்லூரி மாணவர்**

**எச். ஏ. கான் பாடியது**

நலிவுற் றுள்ள தமிழ்நாட்டின்
நிலையை இன்று மாற்றிடவே
அல்லும் பகலும் உழைக்கின்றார்
அணுவள வேனும் ஓய்வின்றி
புலவர் மயிலை சிவமுத்து
புவியில் செய்யும் நற்றொண்டு
பலகா லந்தான் தொடர்ந்திடவே
பாரில் நீடு வாழட்டும்!

மதுரைத் தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்

**அ. கி. பரந்தாமனார், M. A. இயற்றியது:**

(எண்சீர் விருத்தம்)

சித்தாந்த சாத்திரமும் தமிழும் யாரும்
தெளிவாக உணர்ந்திடவே முழக்கி வந்து
புத்துயிரைத் தமிழகத்துக் களித்த எங்கள்
புலவர்மணி திருநாவுக் கரசர் பாலே
நத்திநின்று தமிழ்பயின்ற மயிலை முத்தே,
நண்பர்கடம் நலங்கண்டு மகிழும் நம்பா
முத்தமிழுக்குத் தொண்டு செய்வார் வாழ்வார்
மூதறிஞ நமக்குரைப்பேன், நீடு வாழி!

புலவர். தில்லை. **தா. அழகுவேலனார்** பாடியது:

உண்மை உறுதி உயர்ஊக்கம் நெஞ்சஞ்சாத்
திண்மை செயலாற்றுந் தீரமிகு — வண்மை
எளியநல் வாழ்வு ஏற்றமிகு நோக்குக்
களிமயிலை முத்தவரே காண்.

பொன்னேரி. இளைஞர் தமிழ் இலக்கியமன்றத்

தலைவர் **இரா. சுந்தரேசன்** இயற்றியது:

"யாமார்க்குங் குடியல்லோம்" என்றகொள்கை
ஏற்றவொரு பெரும்புலவர் இருக்கக்கண்டோம்
தாமார்க்கும் தளராமல் தமிழர்க்காகத்
தழைத்தபல யாண்டுகளாய்த் தமிழ்த்தொண்
ஏமார்க்கும் மாணவர்நன் மன்றங்கண்டே [டாற்றி
இரவுபக லாயுழைக்கும் ஏந்தல்வாழ்க!
கோமார்க்குங் கோமானும் கொள்கைவாய்ந்த
மயிலைசிவ முத்துவெனுஞ் செல்வக்கோவே.

மன்றத் துணைத்தலைவர், தணிகை. உலகநாதர்
இயற்றியது:

சென்னைத் தமிழாசிரியர் கழகத்தலைவரும்
சென்னை மாணவர் மன்றக் காப்பாளரும் ஆகிய
பேராசிரியர், முதுபெரும் புலவர்,

## உயர்திரு. மயிலை. சிவமுத்து அவர்கள்

மணிவிழாத் துவக்கத்தை எண்ணி மகிழ்ந்து பாடிய

### வாழ்த்துப்பா

பள்ளிச் செல்லும் பாலர்முதல்
 பழகும் நல்ல முதியோரும்
உள்ளம் மகிழ உரையாற்றும்
 உரவோன் தமிழின் புரவலனும்
வள்ளல் **மயிலை சிவமுத்து**
 மாண்புறு மணிவிழாத் துவங்கியதால்
துள்ளும் எங்கள் மகிழ்ச்சியினைச்
 சொல்லும் அளவும் உள்ளதுவோ?

வெல்லத் தமிழ்பயில் நாட்டினிலே
 மேவிய பிறவிப் பயனாக
நல்ல நமது மொழிகலைகள்
 நாளும் சிறந்து ஓங்கிடவே
பல்லாண் டுகளாய்ப் பலதுறையில்
 பணியாற் றியும்நீ தளராமல்
அல்லும் பகலும் உழைத்திடுவீர்,
 அண்ணல் வாழி வாழியவே.

உயிர்ச்சத் தெல்லாம் காய்கனியில்
உண்டென் றெல்லா அறிஞர்களும்
பயிலும் சொல்லைத் தமிழ்ச்சுவையில்
பார்க்கும் பெரியோன் சான்றோய்நீ
அயரா தென்றும் தமிழ்ப்புலவர்
அணைத்துக் காக்கும் அன்பன்நீ!
மயிலை. சிவ-முத்(து) எனுமெங்கள்
மாண்புறு தலைவ வாழியவே.

சிந்தனை ஊறும் செல்வம்நீ!
சிறுவர் தமக்கும் தோழன்நீ!
செந்தமி ழிளைஞர் தளபதிநீ!
சீர்திருத்தம் மொழி செம்மல்நீ!
முந்தும் புலவோர் தந்தைநீ
முதுபெரும் அமுதக் கலைஞன்நீ!
எந்தவிதம் உனை அழைத்தாலும்
ஏற்கும்! ஏற்கும்!! பெரியோனே!

நன்றி மறவா நல்லோனே
நடுவு நிலைமை தவறானே
தென்றல் தமிழுக் கெந்நாளும்
தீது புரிய எவர்வரினும்
நின்று போரிடும் மறவோனே
நிலையிற் கலங்கா நேர்மையனே
என்றும் இன்சொல் மொழிவோனே
எங்கள் மயிலை. சிவ-முத்தே.

எங்கள் மன்றம் இந்நாளில்
இத்தனை அழகும் பெற்றிடவே
எங்கும் பெருமை கொண்டாட
என்றும் உழைத்த ஏந்தல் நீ
பொங்கும் வளமும் புகழ்பலவும்
பொருந்தி என்றும் வாழியவே
தங்கும் மன்றம் தழைத்திடவே
தமிழ்போல் வாழி வாழியவே.

இங்ஙனம்,
**மாணவர் மன்றத்தினோம்**

**சேலம் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர். திரு. புலவர்.**
**ஞா. தேவநேயப் பாவாணர். B.O.L. பாடியது**

தென்னாட்டில் வாழும் திராவிடநன் னன்மொழியும்
முன்னாட்டும் ஆசிரியர் முன்னேற்ற — நன்னாட்டங்
கொண்மயிலை முத்துக் குமாரசா மியுமக்
கண்மையதே வெற்றி அறி.

அருட்பெருஞ்ஜோதி அச்சகம், சென்னை—1.